LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## GEOS 3104 குடித்தொகைப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. I. குடித்தொகைக் கொள்கை என்றால் யாது?

(05 புள்ளிகள்)

II. இலங்கை அரசாங்கம் அதன் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு பின்பற்றிய குடித்தொகைக் கொள்கைகளைச் சுருக்மாக விளக்குக.

(20 புள்ளிகள்)

02. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகைப் போக்கினை விளக்குவதற்கு மால்துஸின் குடித்தொகைக் கோட்பாடு எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பதனை ஆராய்க.

(25 புள்ளிகள்)

03. I. கருவளத்தின் பல்வேறு அளவீட்டு முறைகள் யாவை?

(10 புள்ளிகள்)

II. கருவளத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் யாதாவது இரண்டினைத் தெரிவுசெய்து அவற்றின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. I. இடப் பெயர்வின் வகைகள் யாவை?

(02 புள்ளிகள்)

II. இடப் பெயர்வினைத் தூண்டுகின்ற காரணிகள் யாவை?

(08 புள்ளிகள்)

III. அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெற்று வந்த இடப்பெயர்வின் தன்மைகளை பொருத்தமான தரவுகள், உதாரணங்களுடன் ஆராய்க.

(15 புள்ளிகள்)

05. இன்று பல நாடுகள் குடித் தொகை, குடிசன வளர்ச்சி, குடிசன அடர்த்திப் பிரச்சினைகளிலும் பார்க்க குடித்தொகையை எவ்வாறு மீள் பரம்பல் செய்யலாம் என்பதிலேயே கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்கு** விளக்கக் குறிப்பு தருக.

I. குடித்தொகைக் கூட்டில் வயதுக் கூட்டின் முக்கியத்துவம்.

II. குடித்தொகை நிலைமாறு கோட்பாடும் இலங்கையும்

III. வளர்முக நாடுகளில் குடித்தொகை அதிகரிப்பும், சூழலியல் தாக்கங்களும்.

(12.5x2=25 புள்ளிகள்)

***